TNUSRB

# போலீஸ் தேர்வு
# மாதிரி வினா-விடை

தினமலர்

## தமிழ் அறிஞர்களும் தமிழ் தொண்டும்

**1) "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என கூறியவர்**
(A) கணியன் பூங்குன்றனார் (B) கம்பர்
(C) திருவள்ளுவர் (D) அவ்வையார்

**2) ஆறுமுக நாவலரை வசனநடை கைவந்த வள்ளலார் எனப் பாராட்டியவர்**
(A) திரு.வி.க (B) பரிதிமாற்கலைஞர்
(C) நாமக்கல் கவிஞர் (D) உ.வே.சா

**3) பொருத்துக.**
a. இளைஞர் இலக்கியம் 1.பாரதியார்
b. ஞானரதம் 2.கவிமணி
c. சங்கொலி 3.பாரதிதாசன்
d. ஆசிய ஜோதி 4. நாமக்கல் கவிஞர்
குறியீடுகள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

**4) ஞானபோதினி என்னும் இதழைத் தொடங்கியவர்**
(A) பரிதிமாற்கலைஞர் (B) மு.சி.பூர்ணலிங்கம்
(C) உ.வே.சா (D) மறைமலையடிகள்

**5) "உன்னையே நீ அறிவாய்" யாருடைய கூற்று?**
(A) சாக்ரடீஸ் (B) ஆபிரகாம் லிங்கன்
(C) மைத்ரேயி (D) கெலன் கெல்லர்

**6) நான் நிரந்தரமானவன் அழிவதில்லை எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை**
எனக் கவிதை பாடியவர்
(A) சுரதா (B) கண்ணதாசன்
(C) பாரதிதாசன் (D) பாரதியார்

**7) "மன்னிப்பு உருதுச்சொல், பொறுத்துக் கொள்க" எனத் தமிழில் சொல்லுங்கள் எனக் கூறியவர்**
(A) முடியரசன் (B) பாவாணர்
(C) மறைமலையடிகள்
(D) பரிதிமாற் கலைஞர்

**8) "தமிழ் பிறமொழித் துணையின்றி தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும்" எனக் கூறியவர்**
(A) டாக்டர் கிரவுல் (B) கால்டுவெல்
(C) வீரமாமுனிவர் (D) ஜி.யு.போப்

**9) மணமூட்டி உணவு விருப்பத்தை உண்டாக்க வல்லது**
(A) கொத்தமல்லி (B) சீரகம்
(C) கறிவேப்பிலை (D) மிளகு

**10) "ஏழையின் குடிசையில் அடுப்பும் விளக்கும் தவிர எல்லாமே எரிகின்றன" என்ற வரிகளுக்கு உரியவர்**
(A) கண்ணதாசன்
(B) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
(C) வல்லிக்கண்ணன் (D) கவிமணி

**11) பரமார்த்த குருகதை எனும் நகைச்சுவை நூலை எழுதியவர்**
(A) வீரமாமுனிவர் (B) கால்டுவெல்
(C) ஜி.யு.போப் (D) க.சச்சிதானந்தன்

**12) பொருத்துக**
பயிர்கள் இடைவெளி
a. வாழை 1. நண்டோட
b. நெல் 2. தேரோட
c. கரும்பு 3. ஏரோட
d. தென்னை 4. வண்டியோட
குறியீடுகள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

**13) 'தென்னிந்தியாவின் ஏதென்ஸ்'எனும் புகழ்மிக்க நகரம்**
(A) நெல்லை (B) மதுரை
(C) தஞ்சை (D) கோவை

**14) "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்ற கட்டுரையை படைத்தவர்**
(A) தாயுமானவர் (B) பாவாணர்
(C) மறைமலையடிகள்
(D) ராமலிங்க அடிகள்

**15) பண்டைய மரப்பாவைக் கூத்து பிற்காலத்தில் எவ்வாறு வளர்ச்சி அடைந்தது**
(A) ஒயிலாட்டம் (B) காளையாட்டம்
(C) தப்பாட்டம் (D) பொம்மலாட்டம்

**16) "சுதந்திர பயிரைத் தண்ணீர் விட்டோ வளர்த்தோம் கண்ணீரால் காத்தோம்" என்பது யாருடைய வாக்கு**
(A) பாரதியார் (B) பாரதிதாசன்
(C) கவிமணி (D) நாமக்கல் கவிஞர்

**17) அண்டத்தின் மையம் பூமியன்று, சூரியனே என்று கூறியவர்**
(A) கோபர் நிகசு (B) தாலமி
(C) கலீலியோ (D) ஐசக் நியூட்டன்

**18) இரவலர்க்கு குதிரை கொடுத்தவர்**
(A) பாரி (B) காரி (C) ஓரி (D) பேகன்

**19) திருச்சிக்கு அருகில் அமைந்துள்ள பண்டை நகரமான உறையூர் முற்காலத்தில் அழைக்கப்பட்ட விதம்**
(A) கோவில் மாநகரம் (B) கோட்டை மாநகரம்
(C) மொழி மாநகரம் (D) கோழி மாநகரம்

**20) காமராஜரின் அரசியல் குரு**
(A) காந்தி (B) அண்ணா
(C) நேரு (D) சத்திய மூர்த்தி

**21) "அர்த்தமுள்ள இந்துமதம்" என்ற நூலை எழுதியவர்**
(A) கண்ணதாசன் (B) நாமக்கல் கவிஞர்
(C) மறைமலையடிகள் (D) பாரதிதாசன்

விடைகள்

1. D 2. B 3. B 4. B 5. A 6. B 7. B
8. B 9. C 10. C 11. A 12. D 13. B
14. B 15. D 16. A 17. A 18. B 19. D
20. D 21. A

ஹெல்மெட் அணிவீர்